

தி.மு.க. செய்தி தொடர்புக்குழுவின் மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று (1–7–2023) காலை சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் தலைமையில், செய்தி தொடர்பு செயலாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் வரவேற்புரையாற்றிட, இணைச் செயலாளர்கள் தமிழன் பிரசன்னா, சிவ.ஜெயராஜ், துணைத் தலைவர் ஆண்டாள் பிரியதர்ஷினி, துணைச் செயலாளர்கள் சையத் ஹபீஸ், சித்திக், கோவை செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், எம்.பி., அவர்கள் கலந்து கொண்டு ”அமலாக்கத் துறை உரிமைகளும், கடமைகளும் மற்றும் ஆளுநரின் விருப்புரிமையும் அரசியலமைப்பு கடமைகளும் எனும் தலைப்பில் கருத்துரைகள் வழங்கினார்.



நேற்று (01.07.2023) கடலூர் மாவட்டம், பிச்சாவரம் அறிஞர் அண்ணா சுற்றுலா வளாகத்தை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் மூலம் இந்தியாவின் சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கியின் கிளஸ்டர் மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.14.07 கோடி மதிப்பீட்டில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்துதல் பணிகள் நடைபெறுவதை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ் உள்ளார்.

### நாமக்கல் மாவட்டம் ஆயில்பட்டியில்

# கிணற்றில் மூழ்கி உயிரிழந்த மூவர் குடும்பத்திற்கு நிதி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஜுலை 2-

நாமக்கல் மாவட்டம் ஆயில்பட்டி அருகே கிணற்றில் மூழ்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், ஆயில்பட்டி அருகே மோட்டார் சைக்கிளில் மெட்டாலா நோக்கிச் சென்று கொண்டிருந்த மாணவர்கள் நிதிஷ்குமார், அபினேஷ் மற்றும் விக்னேஷ் ஆகியோர் எதிர்பாராதவிதமாக 130 அடி ஆழமுள்ள கிணற்றில் விழுந்தனர், இதைப் பார்த்த கணவாய்ப்பட்டியைச் சேர்ந்த குப்புசாமி, த/பெ. இடும்பன் (வயது 45), அசோக்குமார், த/பெ.மாரிமுத்து (வயது 35) மற்றும் சரவணன், த/பெ.கந்தசாமி (வயது 35) ஆகியோர் கிணற்றில் விழுந்த மாணவர்களை மீட்க கயிறு கட்டி கிணற்றில் இறங்கியுள்ளனர்.

இந்த மீட்புச் சம்பவத்தில் குப்புசாமி, த/பெ.இடும்பன் (வயது 45), அசோக்குமார், த/பெ.மாரிமுத்து (வயது 35) மற்றும் சரவணன், த/பெ.கந்தசாமி (வயது 35) மற்றும் சிறுவன் விக்னேஷ் (வயது 15) ஆகியோர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற வேதனையான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமடைந்தேன்.

இவ்விபத்தில் காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மாணவர்கள் செல்வன். நிதிஷ்குமார், த/பெ.கண்ணன் (வயது 15) மற்றும் செல்வன். அபினேஷ், த/பெ.குப்புசாமி (வயது 15) ஆகியோருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மாணவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயில்

# பௌர்ணமி தின சிறப்பு தரிசன கட்டணம் ரத்து!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

திருவண்ணாமலை, ஜுலை 2-

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் பௌர்ணமி தினங்களில் சுவாமி தரிசனம் செய்திட சிறப்பு தரிசன கட்டணம் முழுமையாக இரத்து என்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்து சமய அறநிலையத்துறை வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்ப வசதிகளுக்கு ஏற்ப, பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான வசதிகளை மேம்படுத்திடும் வகையில் பல்வேறு மாற்றங்களையும், புதிய வசதிகளையும் ஏற்படுத்தி செம்மையாக செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோவிலில் பௌர்ணமி தினங்களில் சுவாமி தரிசனம் செய்திட சிறப்பு தரிசன கட்டணத்தை முழுமையாக ரத்து செய்து, அனைத்து பக்தர்களும் பொது தரிசனத்தில் விரைவாக சுவாமி தரிசனம் செய்திட இந்த மாதம் முதல் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

பஞ்சபூத தலங்களில் ஒன்றாகவும், நினைத்தாலே முக்தி தரும் தலமாகவும் திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில் திகழ்கிறது. இங்கு ஈசன் மலை உருவில் ஜோதி வடிவிலேயே அருள் பாவித்து வருகின்றார். இத்திருகோயிலுக்கு மாதந்தோறும் பௌர்ணமி நாட்களிலும், கார்த்திகை தீபத் திருநாளன்றும் தமிழ்நாடு மட்டுமின்றி பிற மாநிலங்கள், வெளிநாடுகளிலிருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சுவாமியின் அருள் பெற்று செல்கின்றனர்.

திருவண்ணாமலை திருக்கோயிலுக்கு அதிக எண்ணிக்கையில் வருகை தரும் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு வசதிகளை செய்து தந்திடும் வகையில் திருக்கோயில் நிர்வாகமானது மாவட்ட நிர்வாகம், திருவண்ணாமலை நகராட்சி, ஊரக வளர்ச்சித் துறை, காவல்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை போன்ற பல்வேறு துறைகளுடன் இணைந்து திருக்கோயில் வளாகம் மற்றும் கிரிவலப் பாதை பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிவறை வசதிகள், தேவையான இடங்களில் குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டு உடனுக்குடன் தூய்மைப்படுத்துதல், மருத்துவ மையங்கள், தற்காலிக பேருந்து நிலையங்கள் போன்ற வசதிகள் ஏற்படுத்தி தந்து வருகிறது.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயிலில் செயல்படுத்தப்பட்டு வந்த அன்னதானத் திட்டத்தை முழு நேர அன்னதானத் திட்டமாக செயல்படுத்திட ஆணையிட்டு, அதனை கடந்த 31.12.2022 அன்று தொடங்கி வைத்தார்கள். மேலும் இத்திருக்கோவிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு தேவையான வசதிகளை மேம்படுத்திடும் வகையில் ரூபாய் 78 கோடி மதிப்பீட்டில் பெருந்திட்டம் வரைவு (மாஸ்டர் பிளான்) தயாரிக்கப்பட்டு, செயல்படுத்திடும் வகையிலான பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2023-24 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்புகளின்படி, கிரிவலப் பாதையில் புகழ்பெற்ற 10 திருக்கோயில்களின் பிரசாதங்கள் பக்தர்களுக்கு கிடைத்திடும் வகையில் பிரசாத கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திருக்கோயிலில் நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் திட்டம் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

திருவண்ணாமலைக்கு விழா காலங்கள் மற்றும் பௌர்ணமி நாட்களில் வருகை தரும் பக்தர்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி தந்திடும் வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் மூலம் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. மேலும் சிறப்பு ரயில்களை இயக்கிட மாவட்ட நிர்வாகமும், இந்து சமய அறநிலையத்துறையும் தென்னக ரயில்வேக்கு கருத்துருக்களை அனுப்பி நிறைவேற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மாதந்தோறும் பௌர்ணமி நாட்களில் திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயிலுக்கு சிறப்பு தரிசனக் கட்டணம் ரூ,50/ ன் மூலம் ஆண்டிற்கு சுமார் ரூ.1.32 கோடி வருமானமாக கிடைக்கப் பெற்று வந்த நிலையில் பக்தர்களின் நலன் கருதி, இந்த மாதம் முதல் சிறப்பு கட்டண தரிசனத்தை முழுமையாக இரத்து செய்து, பொது தரிசனத்தின் மூலமாக பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் விரைவாக தரிசனம் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

### கோ.யுவராஜ் தலைமை! முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# ஆயிரம் விளக்கு 118வது வட்ட தி.மு.க. சார்பில் 500 நபர்களுக்கு அறுசுவை உணவு!

## தயாநிதி மாறன் எம்.பி - நே.சிற்றரசு எம்.சி - அன்பகம் கலை - நா.எழிலன் எம்.எல்.ஏ. வழங்குகின்றனர்!

சென்னை, ஜுலை. 2-

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி, 118 வது வட்டக் கழக தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா முன்னிட்டு 500 நபர்களுக்கு அறுசுவை உணவு பொதுமக்களுக்கு வழங்கும் விழா இன்று (2.7.2023-ஞாயிற்றுக் கிழமை) காலை 10.30 மணிக்கு, பி.வி.கோவில், 2 வது தெரு, புதுப்பேட்டை கிளைக் கழக மன்றத்தில் நடைபெறுகிறது.

118 வது வட்டக் கழகச் செயலாளர் கோ.யுவராஜ் தலைமை வகிக்கிறார்.

ம.ஜெயக்குமார், ப.வினோத்குமார், ஏ.வி. ராமநாதன், ஜெ.மதுராய் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

க.அன்பழகன், சாந்தி பரந்தாமன், எஸ்.ரமேஷ், ம.வேலுமணி, பி.திருத்தணி, கே. தியாகராஜன், டி. பிரபா, இ. கன்னியப்பன், எஸ்.செந்தில், சு.ஆடலரசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை ஆகியோர் அறுசுவை உணவினை பொதுமக்களுக்கு வழங்குகின்றனர்.

இதில் நுங்கை வி.எஸ். ராஜ், கலை கதிரவன், மல்லிகா யுவராஜ் எம்.சி, து. விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு, எம்.ஆர்.ஜம்புலிங்கம், கோ.ரவி, மு. வெங்கடேசன், வைல்ட் மேரி, ஜெ.நற்குணநாதன், கா.சங்கீதா, எஸ்.ராஜேந்திரன், ஜி.அன்புமணி, ஜி. ராகினி, எஸ்.சேகர், கே.செல்வம், ஜெ.கண்ணன், ஆர்.வி.சௌந்தர், ஆர்.எஸ்.நாராயணபாபு, எஸ்.வெங்கடேசன், எஸ். பாஸ்டர், ஜான்சன், டி.பிரபு, டி.மனோகர், ஜி.சம்பத் குமார், போட்டோசுரேஷ், கே.பி. ஜெயராமன், என்.அருண் குமார், எஸ்.சங்கர், டி. ராஜ்மோகன், எஸ்.கார்த்திக், எஸ்.பழனி, தீபன் சக்கரவர்த்தி, ஏ.ராஜ்குமார்,

எம்.தனுஷ், கே.திவாகர், பி.குப்புசாமி, ஜெ. பெருமாள், சி.பழனிராஜ், எம்.ராகுல், டைலர் பாபு, கே.நடராஜன், கா.அப்பன் ராஜ், கா.சரஸ்வதி, எஸ். லட்சுமி, இ.குமரன், கா. சதாசிவம், கே.சரத், கே. ராஜா மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்டக் கழக துணைச் செயலாளர் எம்.காசி நன்றி கூறுகிறார்.

# புகளூர் காகித ஆலை தொ.மு.ச. நிர்வாகிகள் பட்டியல்!

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் புகளூர் காகித ஆலை தொ.மு.ச. நிர்வாகிகள் தேர்தல் (பதிவு எண். 1035/ TRI, பேரவை இணைப்பு எண்.550) திருச்சி மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் திரு. ஜோசப் நெல்சன் அவர்களை ஆணையாளராக கொண்டு 28.06.2023 அன்று புகளூர் காகித ஆலை தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெற்றது. இத்தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் நிர்வாகி களாக வெற்றி பெற்றுள்ளனர்.

**நிர்வாகிகள்**

**தலைவர்** - M.சந்தோஷ்

**துணைத் தலைவர்கள்** - 1) A. பிரபாகரன், 2)S.தயாளன், 3) A.நாகராஜன்

**பொதுச்செயலாளர்** - E. சண்முகம்

**துணைச் செயலாளர்கள்** - 1) V. கதிரவன், 2) P. செல்வக்குமார், 3) A. பிரசாத் குமார்

**அமைப்புச் செயலாளர்கள்** - 1) G. மதன், 2) S. சகாதேவன், 3) K. கபிலன், 4) M. சங்கீத் குமார்

**பொருளாளர்** - K. சேதுராமன்

இடம்: கலைஞரகம்

நாள்: 01.07.2023

**மு.சண்முகம்,** எம்.பி.
பொதுச் செயலாளர்
தொ.மு.ச. பேரவை



பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 13 வார்டு 168ல், 30.6.2023 அன்று சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பில், சென்னை நதிகள் புனரமைப்பு அறக்கட்டளை (CRRT) மூலமாக ரூ.4 கோடி திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ள இருக்கும் ஆலந்தூர் சாலை முதல் கிண்டி தொழிற்பேட்டை சாலை வரை விடுபட்ட கழிவுநீர் கட்டமைப்புகள் அமைக்கும் பணிகளும், பூமகள் மெயின்ரோடு முதல் பாலாஜி நகர் மெயின் ரோடு வரை கழிவுநீர் உந்து குழாய் மாற்றியமைக்கும் பணிகளையும், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனையின்படி, 13வது மண்டல குழு தலைவர் இரா.துரைராஜ் தொடங்கி வைத்தார். இதில் 168வது வார்டு மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார் முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சியில் குடிநீர் வாரிய செயற் பொறியாளர், உதவி பொறியாளர் உள்ளிட்ட அதிகாரிகள், மற்றும் 168வது வட்ட செயலாளர் நா.ராதாகிருஷ்ணன், மாவட்டப் பிரதிநிதிகள் டி.வி.நரசிம்மன், ச.சேகர் மற்றும் கே.எஸ்.பாபு உள்ளிட்ட அணிகளின் நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

### தகுதிச்சுற்று ஆட்டத்தில் தோல்வி

## உலகக்கோப்பை கிரிக்கெட்: மேற்கிந்திய தீவுகள் அணி வெளியேற்றம்!

ஹராரே: ஜுலை 2 -

ஐசிசி ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பை தொடருக்கான தகுதி சுற்று ஆட்டங்களில் தோல்வி கண்டு மேற்கிந்திய தீவுகள் அணி வெளி யேறியுள்ளது.

தகுதி சுற்றில் நேற்று நடந்த சூப்பர் சிக்ஸ் ஆட்டத்தில் ஸ்காட்லாந்து அணியை எதிர்கொண்டது ஷாய் ஹோப் தலைமையிலான மேற்கிந்திய தீவுகள் அணி. முதலில் களமிறங்கிய அந்த அணி, 43.5 ஓவர்களில் 181 ரன்களுக்கு ஆல்அவுட் ஆகி மோசமான பெர்ஃபாமென்ஸை வெளிப்படுத்தியது. ஸ்காட்லாந்து அணி 7 விக்கெட்டுகள் இழப்பு மற்றும் 6.3 ஓவர்கள் மீதமிருந்த நிலையில் வெற்றி இலக்கை எட்டியது.

இந்த தோல்வியின் மூலம் மேற்கிந்திய தீவுகள் உலகக் கோப்பை தொடரில் இருந்து வெளியேறியது. இதன்மூலம் 48 ஆண்டுகால உலகக் கோப்பை வரலாற்றில் முதல் 10 அணிகளில் இடம்பெறாமல் வெளியேறுவது இதுவே முதல் முறை.

ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பையில் இரண்டு முறை (1975 மற்றும் 1979) சாம்பியனான மேற்கிந்திய தீவுகள் அணி இல்லாமல் நடைபெறபோகும் முதல் உலகக்கோப்பையாக இது அமையப்போகிறது.

### திருச்சி தெற்கு மாவட்டத்தில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!



## மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு !

(ஜுன் – 2023 - ஜுன் 2024)

(ஜுலை மாத நிகழ்வுகள் 2023)

| தேதி – நேரம் | நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சி ஏற்பாடு | தலைமை | சிறப்பு அழைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 02/07/23 மாலை 6.00 மணி | கலைஞர் அவர்களின் புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் - 59,59A கலைஞர் நகர் பகுதி | ஜெ.கணேச மூர்த்தி, என்.ராஜேந்திரன், வட்ட கழக செயலாளர்கள் | ஆரணி மாலா தலைமை கழக பேச்சாளர் |
| 05/07/23 காலை 10.00 மணி | மாநகராட்சி துப்புரவு பணியாளர்கள் 100 நபர்களுக்கு சீருடை வழங்கும் விழா | மாநகர துணை செயலாளர் | ஆ.சந்திர மோகன் | மு.மதிவாணன் மாநகர செயலாளர் |
| 08/07/23 மாலை 6.00 மணி | டாக்டர் கலைஞர் அவர்களின் புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் - 14,14A மலைக்கோட்டை பகுதி | ம.இளங்கோ, அ.உதயா ரபி, வட்ட கழக செயலாளர்கள் | கந்திலி கரிகாலன் தலைமை கழக பேச்சாளர் |
| 09/07/23 காலை 10.00 மணி | மாவட்டத்தில் அரசு பள்ளிகளில் படித்து முதல் 10 இடங்களை பிடித்த 10ம் வகுப்பு, 12ம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு கல்வி உதவி தொகை வழங்கும் விழா | மாநகர கழக பொருளாளர் | மா.தமிழ்செல்வன் | மு.மதிவாணன் மாநகர செயலாளர் |
| 15/07/23 மாலை 6.00 மணி | திருக்கோவில் நலிந்த பூசாரிகள் மற்றும் குருக்கள் 100 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் | மாவட்ட அவைத்தலைவர் | என்.கோவிந்தராஜ், | மாவட்ட கழக செயலாளர் |
| 16/07/23 மாலை 6.00 மணி | 9 ஊராட்சிகளிலும் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கல்வெட்டு அமைத்து கொடியேற்றும் விழா | வையம்பட்டி வடக்கு ஒன்றியம் | ஆர்.ஸ்ரீரங்கன் ஒன்றிய செயலாளர் | மாவட்ட கழக செயலாளர் |
| 22/07/23 மாலை 6.00 மணி | விவசாய தொழிலாளர்களை அழைத்து விவசாயத்திற்கு தேவையான உபகரணங்கள் | மாவட்ட, மாநகர விவசாய தொழிலாளர் அணி | ஆ.ஜெகதீசன் மாவட்ட அமைப்பாளர் கோ.வி.நாகராஜன் | திரு.அன்னியூர் சிவா மாநில செயலாளர் |
| | வழங்குதல் | | மாநகர அமைப்பாளர் | |
| 23/07/23 மாலை 6.00 மணி | மணப்பாறை ஒன்றியத்தில் தலைவர் கலைஞர் அவர்களுக்கு புகழ் சேர்க்கும் பொதுக்கூட்டம் | மணப்பாறை ஒன்றியம் | சி. ராமசாமி ஒன்றிய கழக செயலாளர் | மாண்புமிகு எஸ். ரகுபதி அவர்கள் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் சட்டத்துறை அமைச்சர் |
| 30/07/23 மாலை 6.00 மணி | தலைவர் கலைஞர் அவர்களின் புகழ் சேர்க்கும் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் | திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் | கே.எஸ்.எம்.கருணாநிதி ஒன்றிய கழக செயலாளர் | மாண்புமிகு மனோ.தங்கராஜ் அவர்கள் கன்னியாகுமரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் ஆவின் மேம்பாட்டுத்துறை அமைச்சர் |
| 31/07/23 மாலை 6.00 மணி | கலைஞர் அவர்களின் புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் - 33,33A பாலக்கரை பகுதி | மா.கோவிந்தராஜன், பி.சி.எடிங்டன், வட்ட கழக செயலாளர்கள் | துரை காசிநாதன் தலைமை கழக பேச்சாளர் |

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
செயலாளர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.